**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**பாராளுமன்றம்**

---

# 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்தல் சட்டம்

---

*(1998, ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, ஏப்பிறல் மாதம் 30 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 2.50**

**1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்தல் சட்டம்**

[1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஒ. 7/98

**கல்வி நிறுவனங்களிலிருந்து பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் கொடூரமான, மனிதாபிமானமற்ற, கீழ்த்தரமான முறையில் நடாத்தப்படுதலையும் ஒழிப்பதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

*1.* இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பகிடிவதை.

**2.** (1) கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே பகிடிவதை புரிகின்ற அல்லது அதில் பங்குபற்றுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குக் கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் எந்த ஆளுக்கெதிராக தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றினதான நட்டஈட்டை அத்தகைய ஆளுக்குச் செலுத்துமாறும் கட்டளையிடப்படலாம்.

(2) பகிடிவதை புரிகையில் கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவருக்கு அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரொருவருக்குப் பாலியல் தொந்தரவை அல்லது பாரதூரமான காயத்தினை ஏற்படுத்துகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் எந்த ஆளுக்கெதிராக தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றினதான நட்டஈட்டை அத்தகைய ஆளுக்குச் செலுத்துமாறும் கட்டளையிடப்படலாம்.

குற்றவியல் அச்சுறுத்தல்.

**3.** கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரின் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரொருவரின் (இப்பிரிவில் "பலியானவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) உடலுக்கு, நற்பெயருக்கு அல்லது ஆதனத்துக்கு அல்லது பலியானவர் வேறு எந்தவொரு ஆளில் அக்கறையுடையவராக இருக்கின்றாரோ அந்த ஆளின் உடலுக்கு, நற்பெயருக்கு அல்லது ஆதனத்திற்கு ஊறுவிளைவிப்பதாக பலியானவரை அச்சத்துக்கு உட்படுத்தும் எண்ணத்துடன் அல்லது பலியானவர் எந்தச் செயலைச் செய்யுமாறு சட்டப்படி தேவைப்படுத்தப்பட வில்லையோ அந்தச் செயல் எதனையும் செய்யுமாறு அல்லது எந்தச் செயலைச் செய்வதற்கு பலியானவர் உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலைச் செய்யாதுவிடுமாறு வற்புறுத்தும் எண்ணத்துடன் வாய்மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அச்சுறுத்துகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை யிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற் றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

பணயம் வைத்தல்.

**4.** எந்தச் செயலின்மூலம் கல்வி நிறுவனமொன்றின் எவ ரேனும் மாணவரின் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரின் அல்லது வேறு ஆளின் சொந்தச் சுதந்திரமும் நடமாடும் சுதந்திரமும் அத்தகைய கல்வி நிறுவனத்திற்குள்ளாக அல்லது அத்தகைய கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவத்தின்கீழும் கட்டுப்பாட்டின் கீழுமுள்ள எவையேனும் வளவுகளுக்குள்ளாக சட்டமுறையான நியாயப்படுத்துதல் இல்லாமலும் அத்தகைய மாணவரை, பணியாட்டொகுதி உறுப்பினரை அல்லது வேறு ஆளை குறிப்பிட்டவொரு செயல் நெறிமுறையை மேற்கொள்ளு மாறு வற்புறுத்தும் நோக்கத்திற்காகவும் தடைசெய்யப்படு கின்றதோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன் பேரில் ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.